'1990 ஏப்ரல் 18]

நம்முடைய சீ.ஈ. கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனவே, முடிந்த முடிவு எடுத்த பிறகு இந்த பாலம் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. க. சொ. கணேசன்: தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல அணைக்கரை பாலம் ஆட்டம் காணுகின்ற நிலையில் இருப்பதால் அது இடிந்து விழுவதற்குள்ளாகவே வெகு சீக்கிரம் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து கட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அது இடியாது. இருந்தாலும், இந்தப் பாலம் கட்டப்படும்.

வராக நதியில் பாலம் கட்டுதல்.

*3799 திரு. எல். மூக்கையா:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியகுளம் ஒன்றியத்தில், வடுகப்பட்டி- எ.காமாட்சிபுரம் சாலையை இணைக்கும் வகையில் வராக நதியில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இதற்கான திருத்திய நிர்வாக ஒப்புதல் ஆணை 19.1.89-ல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இப்பாலத்திற்கான அடித்தள வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

திரு. எல். மூக்கையா: பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் வடுகபட்டி—எ. காமாட்சிபுரம் சாலையை இணைக்கும் வகையில் வராக நதியில் கட்ட இருக்கும் பாலத்தினுடைய திட்ட மதிப்பு எவ்வளவு? அது எவ்வளவு காலத்தில் கட்டி முடிக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த வடுகபட்டி—எ. காமாட்சிபுரம் வராக நதியின் மீது கட்டப்படுகின்ற பாலத்தினுடைய மொத்த மதிப்பீடு ரூ.35.20 இலட்சம் ஆகும். அதோடு இப்போது ரூ.19.50 இலட்சம் செலவில் ஒரு துணை பாலம் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் அதோடு இணைத்து சேர்த்திருக்கிறோம். அது லம்ப்சம் ப்ரொவிஷனுள் அடங்கும்.

திரு. எல். மூக்கையா : தலைவர் அவர்களே, அந்தப் பாலம் எவ்வளவு காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என அறிய விரும்புகிறேன்,